<u>செய்தி வெளியீடு எண்.764</u> <u>நாள்.27.10.2009</u>

## அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டத்தினை மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் இன்று (27.10.2009) தொடங்கி வைத்தார்கள்.

இன்று (27.10.2009) சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக மாநாட்டு அறையில், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமையில், அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

### செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் அவர்களின் வரவேற்பு

இக்கூட்டத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு.சி.காமராஜ், இ.ஆ.ப., அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள்.

### மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்து உரையாற்றுதல்

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் பணி ஆய்வுக் கூட்டத்தினை தொடங்கி வைத்து பின்வருமாறு உரையாற்றினார்கள்.

முதலில், 2009 ஆம் வருடம் ஆகஸ்டு 13 ஆம் தேதி சென்னையில் நடைபெற்ற கன்னட கவிஞர் சர்வக்ஞர் சிலை திறப்பு விழா நிகழ்ச்சியையும், செப்டம்பர் 15 ஆம் தேதி நடைபெற்ற பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழா நிகழ்ச்சியினையும், மதுரையில் அக்டோபர் 10 ஆம் தேதி நடைபெற்றகக்கன் நூற்றாண்டு விழாவினையும் வெற்றிக்கரமாகவும், அனைவரும் பாராட்டும் வகையிலும் நடத்திக் கொடுத்த செய்தித் துறை அலுவலர்களுக்கு தனது வணக்கத்தையும், நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்தார்கள். எல்லோரும் பாராட்டும் வகையில் இத்துறை முன்னேறிக் கொண்டிருக்கிறது என்றும், இத்துறைக்கு உள்ள முக்கிய கடமைகள் குறித்தும் கருத்து தெரிவித்து, ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவராவது இவ்வரசின் திட்டத்தினால் பயனடைந்துக் கொண்டிருக்கிறார்கள், அரசின் பல்வேறு திட்டங்களை பொதுமக்கள் முழுமையாக தெரிந்து கொள்வதற்கும், அதன் பலன்களை பெறுவதற்குரிய வழிகளை அறிந்து கொள்வதற்கும், பலனடைவதற்கும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள்,

பணிகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். என்னிடமே என் தொகுதிக்காரர் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்ள வழிமுறைகளை கேட்டறிந்து சென்னையிலுள்ள எம்.எம்.எம், மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டு நலமுடன் வாழ்ந்து வருகிறார். அவர் நன்றி தெரிவித்த போது நான் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன் என்று தெரிவித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இதுபோன்று பல்வேறு திட்டங்களை அமுல்படுத்தி வருவதை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில், முழுமையாக பயன்பெறும் வகையில் நீங்கள் பணியாற்றிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

எனக்கு மாவட்டங்களில் எந்தெந்த மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் பணிபுரிகிறார்கள், பணிபுரியாதவர்கள் யார் என்றும் தெரியும். அவர்களை பணிபுரிய வைக்க வேண்டியதற்குரிய வழிவகைகளையும் செய்ய தெரியும். நான் கட்சிபேதம் பார்ப்பதில்லை. மனிதாபிமான அடிப்படையில் பணிமாறுதல்கள் செய்து கொடுத்துள்ளேன். எந்த காலத்திலும் இல்லாத அளவுக்கு தற்போது இத்துறையில் பதவி உயர்வுகள் அளிக்கப்பட்டுள்ளன. பணியிடங்களில் பலர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். அரசாங்க திட்டங்களை மக்களுக்கு ஒழுங்காக சேர்க்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டும். நாம் அரசாங்க ஊழியர், மக்கள் ஊழியர் என்ற எண்ணத்தோடு பணிபுரிய வேண்டும்.

பணி ஆய்வு கூட்டத்தின் கூட்ட நிரலை பார்வையிட்டேன். நன்றாக அமைந்துள்ளது. அதில் கொடுத்துள்ள தகவல்களை ஆராய்ந்து இத்துறை முன்னேறுவதற்குரிய பணிகளை முனைப்புடன் மேற்கொள்ள வேண்டும் என்று ஆய்வுக் கூட்டத்தில் பேசி உரையாடினார்கள்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு.சி.காமராஜ், இ.ஆ.ப. அவர்கள் பணி ஆய்வினை மேற்கொள்ளும்போது அனைத்து மாவட்டங்களிலும் மாதந்தோறும் வெளியிடப்படும் செய்தி வெளியீடுகள்/செய்தி குறிப்புகள், புகைப்பட வெளியீடுகள்,

செய்தியாளர்கள் சந்திப்பு, செய்தியாளர்கள் பயணம் மற்றும் சிறப்பு பயணங்கள், வீடியோ தொலைக்காட்சி மூலம் அரசின் திட்டங்கள் மற்றும் நிகழ்வுகள் ஒளிபரப்பிய விவரங்கள், பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், குடும்ப உதவி நிதி, மருத்துவ உதவி மற்றும் சலுகை விலையில் வீட்டுமனைப் பட்டாக்கள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய வாடகை குடியிருப்புகள், இலவச பேருந்து பயண அட்டைகள், செய்தியாளர் அங்கீகார அட்டைகள், செய்தியாளர் அடையாள அட்டைகள் வழங்கப்படும் விவரங்கள், சிறு கண்காட்சிகள் நடத்திய விவரங்கள், பல்துறை பணிவிளக்க முகாம்கள் நடத்துதல், தமிழரசுக்கு சந்தா சேர்க்கும் விவரங்கள், வெற்றிக்கதைகள் வெளியீடு, தமிழரசுக்கு கட்டுரைகள் அளித்தல், ஒப்பந்தப்புள்ளி மலர், நீதிமன்ற வழக்குகள், நீண்டநாள் நிலுவையில் உள்ள கோப்புகள், தணிக்கை தடை, திரையரங்கில் அரசு செய்தி வெளியிடுவது குறித்த ஆய்வு, கேபிள் டிவி படக்காட்சி, இத்துறையில் பணியாளர்கள் நிரப்பப்படாமல் உள்ள பணியிட விவரங்கள் மற்றும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பிற கருத்துகள் ஆகியவற்றை மாவட்டவாரியாக ஆய்வு செய்து அவ்வப்போது தகுந்த அறிவுரைகளை வழங்கினார்கள்.

பிற்பகலில், மக்கள் நல்வாழ்வுத் துறையின் சிறப்பு செயலாளரும், தமிழ்நாடு சுகாதார மேம்பாட்டு திட்டத்தின் இயக்குநரும், தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு கழகத்தின் திட்ட அலுவலரும், கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் பொறுப்பு அலுவலருமான டாக்டர் விஜயகுமார் அவர்கள் மக்கள் நல்வாழ்வுத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் கலைஞர் காப்பீட்டுத் திட்டம் மற்றும் மருத்துவத் திட்டங்கள் குறித்து விளக்கவுரையாற்றினார்கள்.

தமிழ்நாடு திரைப்படத் துறையினர் தயாரித்த கலைஞர் காப்பீட்டுத் திட்டம் படக்காட்சி இக்கூட்டத்தில் திரையிடப்பட்டு, தமிழ்நாட்டில் உள்ள கிராமங்கள் தோறும் இப்படம் திரையிட்டு காண்பிப்பது குறித்து கலந்துரையாடப்பட்டது.

பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழாவில் சிறப்பாக பணியாற்றியமைக்காக செய்தித் துறையின் இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், தமிழ்நாடு திரைப்படப் பிரிவினர் மற்றும் புகைப்படப்பிடிப்பாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

நிறைவுக் கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் திரு.க.முத்துசாமி, இ.ஆ.ப. பங்கேற்று பின்வருமாறு உரையாற்றினார்கள்

இவ்வாய்வுக் கூட்டம் மிக விரிவாக நடைபெற்றதற்கு எனது மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கிறேன். செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, அரசு எதிர்பார்க்கின்ற வகையில், தங்கள் செயல்பாடுகளை, திறமைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். இதுபோன்ற சிறப்பான பணிகள் தொடர வேண்டும். நான் இயக்குநராக இருந்தபோது மாவட்ட அளவில் நல்லதொரு போட்டி இருக்க வேண்டும் என்று கருதி செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் அனுப்பும் மாதாந்திர அறிக்கைகளை ஆய்வு செய்து மதிப்பெண் அளிக்கப்பட்டு, மாதாந்திர கூட்டத்தில் பாராட்டப்பட்டது. இது படிப்படியாக நின்றுவிட்டது. திரும்பவும் தொடர இயக்குநர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். படக்காட்சிகள் திரையிடுவதன் மீது அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கூறி நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு சிறப்பாக பணியாற்றியவர்களுக்கு பாராட்டுகளை தெரிவித்தார்கள்.

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள், நிறைவாக செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் அரசின் காதுகளாக, கண்களாக செயல்பட்டு வருபவர்கள். நீங்கள் இன்னும் முனைப்புடன் செயல்பட வேண்டும். இதுபோன்ற ஆய்வுக் கூட்டங்கள் ஆறு மாதங்களுக்கொருமுறை அல்லது மாதமொருமுறை நடைபெற்றால் கருத்து பரிமாற்றங்கள் அதிக அளவில் இருக்கும். அதன் மூலம் சிறப்பான செயல்பாடுகள்

அமையும். வெற்றிக் கதைகள் நாளிதழ்களில் வெளிவருவது மட்டும் போதாது. ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு யூனியனிலும், ஒவ்வொரு கிராமத்திற்கும் அரசின் திட்டங்கள் அதன் வெற்றிக்கதைகள் மக்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும். இவ்வரசின் மீது அதிருப்தியோ, எதிர்ப்பலைகளோ இல்லை. நீங்கள் மக்களுக்கும், அரசுக்கும் பாலமாக இருந்து பணியாற்ற வேண்டும். இயக்குநர் அவர்கள் நீங்கள் தெரிவித்ததை எல்லாம் குறித்து வைத்துள்ளார்கள். அதனை நிவர்த்தி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படும். வீடியோ கான்பரன்சிங் மூலமாகவும் மாதாந்திர ஆய்வுக் கூட்டங்கள் நடத்த வழிவகை செய்யப்படும். ஒவ்வொரு மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்திலும் திட்டங்கள் குறித்து தொடுதிரை கணினி (Touch Screen) நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும். மாறுதல்கள்தான் மாறாதது என்ற தத்துவத்தின்படி நவீன தொழில்நுட்பத்திற்கேற்ப உங்கள் திறமைகளை வளர்த்துக் கொண்டு பணிபுரிய நல்ல கருத்துக்களை வழங்கிய உங்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு.சி.காமராஜ், இ.ஆ.ப. அவர்கள், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி மற்று தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு.க.முத்துசாமி, இ.ஆ.ப. ஆகியோருக்கு சால்வை அணிவித்தார்கள். செய்தித் துறை இணை இயக்குநர் (மக்கள் தொடர்பு) திரு.கா.சம்சுதீன் அவர்கள் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு.சி.காமராஜ், இ.ஆ.ப. அவர்களுக்கு சால்வை அணிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், இணை இயக்குநர்கள் (நிர்வாகம்) திரு.தங்க.புகழேந்தி,
(மக்கள் தொடர்பு) திரு.கா. சம்சுதீன், துணை இயக்குநர்கள் (பொருட்காட்சி)
திரு.ஜீ.மணிக்குமார், (செய்தி) திரு.த.இளங்கோவன், (வெளியீடுகள்)
திரு. துரை.தாமரைச்செல்வன், (நினைவகங்கள்) திரு.துரை. ராஜ்குமார்,

உதவி இயக்குநர்கள் (நிர்வாகம்) திரு.ந.இளங்கோ, (பத்திரிகை தொடர்பு) திரு.சி.அமிர்தலிங்கம், (நினைவகங்கள்) திரு.பாலையா மற்றும் அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், சென்னையிலுள்ள அண்ணா சதுக்கம், கலைவாணர் அரங்கம், வள்ளுவர் கோட்டம், மாநில செய்தி நிலையம், பொருட்காட்சிப் பிரிவு, மேற்கோள் பிரிவு, ராஜாஜி மண்டபம், தமிழரசு ஆகியவற்றின் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் பங்கேற்றனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9